பாரதிதாசன் பல்கலைக்கழகம்
(தேசிய மதிப்பீட்டுத் தரநிர்ணயக் குழுவின் "A+" தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)
பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024.
தமிழ்நாடு, இந்தியா

அலுவலகம் : 0431-2407016,2407060
தொலைப்படி : 0431-2407444
மின் அஞ்சல் : coe@bdu.ac.in
வலைத்தளம் : www.bdu.ac.in

முனைவர் க. துரையரசன், எம்.ஏ.,எம்.பில்.,எம்.எட்.,பி.எச்.டி.
தேர்வு நெறியாளர்

---

ந.க.எண்.202/தே.நெ.அ/ம.பி-2/2019

நாள்: 29.08.2019

பெறுநர்

அனைத்துக்கல்லூரி முதல்வர்கள்

பொருள்: தேர்வாளர்கள் பட்டியல் திருத்தம் செய்தல் - துறைவாரியாக ஆசிரியர்களின் பெயர் பட்டியல் கோருதல் - தொடர்பாக.
பார்வை: ந.க.எண்.201/தே.நெ.அ/ம.பி-2/2019, நாள்: 05.08.2019.

-----

பல்கலைக்கழகத் தேர்வுப் பணிகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்கி வரும் அனைத்துக் கல்லூரி முதல்வர்களுக்கும்/செயலர்களுக்கும்/ஆசிரியர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்கலைக்கழகத் தேர்வுப்பணிகள் மேலும் செம்மையாகவும் விரைவாகவும் நடைபெற தங்களின் மேலான ஒத்துழைப்பை எதிர்நோக்குகிறேன்.

பல்கலைக்கழகத் தேர்வுப் பணிகளுக்காக இணைவுபெற்ற/தன்னாட்சிக் கல்லூரிகளில் தற்பொழுது பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் கௌரவ விரிவுரையாளர்களின் பெயர்களைத் தனித்தனிப் பட்டியலாக இணைப்பில் கண்டவாறு 16.08.2019-க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி உதவிடுமாறும் கல்லூரிகளிலிருந்து பெறப்படும் பட்டியல் அடிப்படையில் பல்கலைக்கழக இணைய தளத்தில் உள்ள தேர்வாளர்கள் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்றும் திருத்தம் செய்யப்பட்ட தேர்வாளர்கள் பட்டியல் அடிப்படையில் மட்டுமே நவம்பர் 2019 மதிப்பீட்டுப்பணி முதலான அனைத்துத் தேர்வுப் பணிகளுக்கும் ஆசிரியர்கள் அழைக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதுநாள் வரை மேற்படி பட்டியலை அனுப்பாத கல்லூரிகள் 06.09.2019-க்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலன் கருதி இதில் கூடுதல் கவனம் செலுத்துமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

29/8/19

தேர்வு நெறியாளர்

குறிப்பு: பல்கலைக்கழக தேர்வாளர்கள் பட்டியலில் இடம் பெறாத ஆசிரியர்கள் (மூன்று வருடம் பணி அனுபவம் நிறைந்த ஆசிரியர்கள் மட்டும்) புதிய தன்விவரப் படிவத்தை (Staff Return Form) நிறைவு செய்து முறைப்படி அனுப்பி வைக்கவும்.